# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.
# அசல் வழக்கு எண். 47/2024

பெயர் : வேல்முருகன் த/பெ. துரைசாமிகவுண்டர் நாள் : 15.06.2026

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சென்ற வழக்கு விசாரணையின் போது எனது சார்பாக முன்னிலையான வழக்கறிஞர் எனது தங்கையின் கணவர் என்றால் சரிதான். அவர் பெயர் சண்முகம் என்றால் சரிதான். ஜெகதீஸ்வரன் என்பவர் 21.04.2003ல் தான் சர்வே எண்.279/5 ல் உள்ள வீட்டை கிரயம் பெற்றார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் சர்வே எண்.279/5 க்குரியது என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சென்ற வழக்கு விசாரணையின் போது அ.வ.எண்.267/1998 ல் ஜெகதீஸ்வரனை சேர்க்கவில்ல என்று சொல்லியுள்ளேன் என்றால சரிதான். 1998ல் ஜெகதீஸ்வரனுக்கும் தாவா சொத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதால் தான் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2. 2019ல் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்து ரீ.சர்வே எண்.279/11, 12,13, 14, 15 என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அந்த சர்வே எண் தவறானது என்று தெரிந்தவுடன் திருத்தல் மனு தாக்கல் செய்து அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு அந்த மனுவின் மீது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அந்த உத்தரவின்அடிப்படையில் தற்பொழுது மனு திருத்தம் செய்யப் பட்டுள்ளது. தாவா சொத்திற்கு மேல்புறமாக அருகில் ஈரோடு டூ அரச்சலூர் செல்லும் பிரதான சாலை உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஈரோடு டூ அரச்சலூர் மெயின் ரோட்டில் இருந்து தாவா சொத்துக்கு செல்லும் சாலை பிரிந்து கிழமேலாக செல்கிறது.

3. ஈரோடு டூ அரச்சலூர் சாலை மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமானது என்றால் சரிதான். SH 83A என்று அரசால் மேற்படி சாலைக்கு எண் கொடுக்கப் பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2019ல் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது மாநில நெடுஞ்சாலை ஒரு தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணமான ரீ.ச.279 புல வரைபடத்தில் உட்பிரிவுகள் 11,12,13,14,15 அனைத்தும் மேல்புறத்தில் தென்வடலாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வா.சா.ஆ.4 ஆவணத்தில் ரீ.ச.279/5 தென்புறத்தில் அமைந்துள்ளது என்றால் சரியாக தெரியவில்லை, புலவரைபடத்தில் பார்த்து என்னால் சரியாக சொல்ல இயலவில்லை.

4. ரீ.ச.278/2க்கு எனது பூமிக்கு வடபுரமாக உள்ளது என்றால் சரிதான். 2019ல் தாவா தாக்கல் செய்யும்போது வரைபடம் இணைத்துள்ளேன் என்றால் சரிதான், வரைபடத்தில் உள்ள சர்வே எண் தவறு என தெரிந்ததால் அதை எனது முதல் விசாரணையில் தற்போது குறிப்பிடவில்லை. தாவா வரைபடத்தில் எனது பூமி 278/2க்கு வடபுரமாக ரீ.ச.279/11,12,13,14,15 உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அதை தற்போது நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் திருத்தப்பட்ட வழக்குரை உத்தரவின் படி வழக்குரை திருத்தியுள்ளேன், புதிய மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை. பழைய மாதிரி வரைபடத்தை நான் மறுத்துள்ளேன். 2019ல் வழக்கு

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.06.15 18:49:32 +0530

தாக்கல் செய்யும்போது மாநில நெடுஞ்சாலையின் ரீ.சர்வே எண்ணை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அதை தற்போது நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் திருத்தப்பட்ட வழக்குரை உத்தரவின் படி வழக்குரை திருத்தியுள்ளேன். அதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான வருவாய் ஆவணங்கள் சம்பந்தப்பட்டதா என்றால் சரியல்ல.

5. 2019ல் வழக்கு தாக்கல் செய்யும்போது சர்வே எண்.279/5 ஐ சொத்து விபரத்தில் குறிப்பிட்டால் அதுகுறித்து ஏற்கனவே நீதிமன்றத்தில் தீர்ப்புள்ள காரணத்தினால் நீதிமன்றத்தில் இவ்வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொள்வதற்காக மாநில நெடுஞ் சாலைக்கு சொந்தமான வண்டிபாதை என வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் பொய்யான தகவலை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் மொடக்குறிச்சி தாலுக்கா உதயமானபிறகு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இதற்கு முன்பாக தாவா சொத்து ஈரோடு வட்டத்திற்குட்பட்டது என்றால் அதுபற்றி சரியாக தெரியவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் 06.09.2021 ம் தேதியன்று ஒருதலைபட்சமாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றால் சரிதான். ஒருதலைபட்சமாக உத்தரவிற்கு பின்னிட்டு 11 மாதம் காலம் நீதிமன்றத்தில் நான் ஆஜராகவில்லை என்றால் சரிதான், நான் அப்பொழுது கொரானா தொற்று காரணமாக வெளியில் செல்ல முடியாமல் இருந்தேன்.

6. 05.08.2022 அன்று நான் வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகவில்லை என்றால் தள்ளுபடி செய்யப்படும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது என்றால் அதுபற்றி தெரியவில்லை. அதன் பிறகு தான் வழக்குரையை திருத்தம் செய்ய இ.ம.எண்.7/2022 தாக்கல் செய்துள்ளேன் என்றால் இடைமனு தாக்கல் செய்தேன், ஆனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும் என நீதிமன்றம் குறிப்பிட்டதால் தான் மேற்படி மனு தாக்கல் செய்தேன் என்பது சரியல்ல. இ.ம.எண்.7/2022 ல் ரீ.ச.279/11,12,13,14,15 ஐ மாற்றி ரீ.ச.279/5 என திருத்தம் செய்யவேண்டி அம்மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு இந்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. அதன் பின்னிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP எண். 3674/2023 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் 31.07.2025 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு நகல் என்னிடம் காட்டப்படுவது என்று சொன்னால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப் படுகிறது.** என்னிடம் காட்டப்படும் இ.ம.எண்.7/2022 ல் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தின் கூடிய மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான்.**அது பி.வா.சா. ஆ.11ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.267/1998ல் வழக்குரையில் இணைத்துள்ள வரைபடத்தின் அடிப்படையில் நான் திருத்ததை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அது ஏற்கனவே வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரே வண்டிப்பாதைக்கு 2வது முறையாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், 2 வழக்குகளிலும் வழக்கு மூலம் வேறு வேறு ஆகும்.

8. இந்த வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட நாளன்று நான் வரமுடியா விட்டால் என் சார்பாக என் தாயார் சாவித்ரி அல்லது தங்கை யமுனா வழக்கு

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.15 18:49:37 +0530

விசாரணை அன்று ஆஜராவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமான 03.10.2007 தேதியிட்ட கிரைய பத்திரத்தை 11.12.2019ல் இந்த வழக்கை தாக்கல் செய்த போது ஆவண பட்டியலில் கொடுக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. 2007 ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு மூலம் ஏற்பட்டதாக இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் மூலம்உரிமை கோரி நிவாரணம் கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. 2007 ல் கிரையம் பெற்று 2019 வரை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி பத்திரத்தை தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் காரணம் எதுவும் இல்லை. வேறு விதமான வழக்கு நடைபெற்றதால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து வண்டிப்பாதையை அனுபவித்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அரசு பொதுப்பாதை என்பதால் அதை அனுபவித்தற்கான ஆவணம் எதுவும் இல்லை. தாவா சொத்து வண்டிப்பாதையை உரிமையோடு நான் அனுப்பவில்லை என்றால் 55 வருடமாக இந்த பொது வண்டிப்பாதை வழியாகத்தான் சென்று வருகிறேன். வேறு பாதை இல்லை.

9. இ.ம.எண்.20/2026 மனுவில் வா.சா.ஆ.3 ஆவணத்தை தாக்கல் செய்ததின் பேரில் 09.03.2026 அன்று மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு தான் வாதுரையை திருத்தம் செய்து மேற்படி ஆவணத்தை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். தாமதமாக 8 ஆண்டுகள் கழித்து வழக்குரையில் சேர்த்தற்கான காரணம் உள்ளதா என்றால் தற்போது இந்த வழக்கிற்கு தேவை என்று கருதியதால் தாக்கல் செய்துள்ளேன். 2007ல் ஆவணத்தில் எனது வீடு வரை செல்ல உரிமையுள்ளது என குறிப்பாக சொல்லவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது, **மேற்படி சொத்துக்கு தென்வடல் ஈரோடு டூ பூந்துறை மெயின் ரோட்டில் இருந்து ரீ.ச.எண்.279/5 தெற்கு ஓரமாக வரும் 15 அடி அகலமுள்ள பட்டா வண்டிப்பாதையின் வழியாக வண்டி வாகனாதிகள் கால்நடைகள் ஓட்டிக்கொண்டும், நடந்து கொண்டும் போகவரவுள்ள பாதை வழிதடம் சகிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.**

10.2007 கிரய ஆவணம் அத்தப்பகவுண்டர் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். 26.02.1968 ம் தேதியிட்ட வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூல கிரைய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரியாக எனக்கு தெரியவில்லை. அருணாசலம் என்பவரை தெரியுமா தெரியாது. 2007 கிரைய பத்திரத்தை அடமானம் வைத்து அருணாசலம் என்பவரிடம் பணம் பெற்றேனா என்றால் இல்லை. நான் பணத்தை திருப்பி செலுத்ததால் மேற்படி அருணாசலம் ஈரோடு மாண்புமிகு முதல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.392/2014 தாக்கல் செய்தார் என்றால் ஞாபகம் இல்லை. அ.வ.எண்.392/2014 வழக்கில் இ.ம.எண்.435/2014 ல் நீதிமன்றம் பிடித்தம் செய்து உத்தரவிட்டு அது பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

11. 2019ல் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது அருணாசலம் என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்தினால் சேர்க்க-வில்லை என்றால் ஞாபகம் இல்லை. 2007ல் கிரையம் பெற்ற வீடு பெயரளவில் ஒரு ஆவணத்தை உருவாக்கியுள்ளேன் என்றால் தவறு. தாவா வண்டித்தடத்தின் படி அனுபவிக்கவில்லை என்றால் தவறு. 12.01.2022ல் மொடக்குறிச்சி வட்டாட்சியர் தாவா சொத்திற்கு நேரில் வந்தாரா என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆனால் வந்துள்ளார். நானும், எனது தாயார் சாவித்ரியும் தாவா சொத்தை பயன்படுத்துவதை பிரதிவாதிகள்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.15 18:49:41 +0530

தடுத்தால் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்படும் என்று எச்சரிக்கை செய்தார் என்றால் தவறு. என்னையும், எனது தாயாரையும் அரசு பொதுப்பாதையை பயன்படுத்துவதை தடுத்தால் கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்படும் என்று பிரதிவாதி எச்சரிக்கை செய்தார். 2007 கிரைய பத்திரத்தில் பட்டா பூமி என்று சொல்லிவிட்டு எதன் அடிப்படையில் தாவா வண்டிப்பாதை அரசு பொதுப்பாதை என சொல்கிறேன் என்றால் கிரைய ஆவணத்தில் பத்திர எழுத்தர் வண்டிப்பாதை என தவறுதலாக எழுதிவிட்டார், அரசு வருவாய்துறை ஆவணத்தில் மேற்படி சர்வே எண் பொது பாதை என FMB ல் குறிப்பிட்டுள்ளதால் நான் தாவா வண்டிப்பாதை அரசு பொதுப்பாதை என குறிப்பிட்டுள்ளேன். வட்டாட்சியரும் அதற்கு சான்று வழங்கியுள்ளார். இதன் அடிப்படையில் பொதுபாதை என குறிப்பிட்டுள்ளேன். புலவரைபடம் ரீ.ச.279ல் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பிரதிவாதிகள் வட்டாட்சியர் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அளித்து அதற்கு வட்டாட்சியர் அலுவலகம் சார்பாக எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை என பதிலளிக்கப் பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி மனு பி.வா.சா. ஆ.12ஆக குறியீடு செய்யப் படுகிறது.**

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.15 18:49:46 +0530